**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை, சென்னை – 18.**

**முன்னிலை : திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., ஆணையர்.**

**ந.க.875/2022/கூ.தே1(2)** **நாள் :11.01.2023**

**பொருள் :** கூட்டுறவுச் சங்க தேர்தல் 2023 – நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தல்கள் – சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை - மாவட்ட தேர்தல் அலுவலர் நியமனம் வழங்கியது – மாற்றம் செய்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள் நியமனம் செய்தல் – தொடர்பாக.

**பார்வை :**

1. தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தின் கடிதம் ந.க.875/2022/கூ.தே1, நாள் 12.09.2022.
2. சமூக நல இயக்குநர் அலுவலக ந.க.024825/சி.தி-2/2022, நாள் 11.01.2023.

*****

**ஆணை:**

பார்வை 1-ல் காணும் ஆணையத்தின் செயல்முறை ஆணைப்படி, சமூக நல இயக்குநர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் மாவட்ட அளவிலான நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்திட மாவட்ட தேர்தல் அலுவலர்களை ஆணையம் நியமனம் செய்தது.

இந்நிலையில் பார்வை 2-ல் காணும் கடிதத்தின்படி சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையில் புதிதாக பிரிக்கப்பட்ட செங்கல்பட்டு, இராணிபேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, தென்காசி மற்றும் மயிலாடுதுறை ஆகிய 6 புதிய மாவட்டங்களுக்கும் அந்தந்த மாவட்ட சமூக நல அலுவலர்களை கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களுக்கான மாவட்ட தேர்தல் அலுவலராக நியமனம் செய்து ஆணை வழங்கிடுமாறு கோரப்பட்டுள்ளது.

மேற்கண்ட சமூக நல இயக்குநர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கோரிக்கையினை ஆணையம் கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்று இணைப்பில் கண்டுள்ள அலுவலர்களை அவர்கள் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட

தேர்தல் அலுவலர்களாக 1988-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள், விதிஎண்.52-A(4)-இன் கீழ் தனக்களிக்கப்பட்ட அதிகாரத்தினை கைக்கொண்டு ஆணையம் ஆணையிடுகிறது.

இவ்வாறு நியமிக்கப்பட்ட மாவட்ட தேர்தல் அலுவலர்கள் நியமனம், அவை தொடர்பாக மாற்று **ஆணை ஏதும் பிறப்பிக்கப்படாத வரை, புதிய நியமன ஆணைகள் ஏதும் தேவைப்படாத**, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையின் மாவட்ட அளவிலான நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் வரும் (Administrative Control) சங்கங்களின் ஒட்டுமொத்த தேர்தல் (Enmasse Elections) மற்றும் அவை தவிர்த்த இதர வகையிலான தேர்தல்கள் (Other than Enmasse Elections) மற்றும் காலியிடங்களுக்கான தேர்தல்கள் அனைத்திற்கும் பொருந்துவதாகும் என்றும் **அவர்கள் மாவட்ட தேர்தல் அலுவலர்களாக தொடர்ச்சியாக இருந்து வருவார்கள் (Shall continue as DEO's) என்றும் அறிவிக்கப்படுகிறது.**

இவ்வாறு விதி எண்.52-A(4)-ன் கீழ் ஆணையத்தால் நியமிக்கப்படும் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் அவ்விதியில் சொல்லப்பட்டபடி, தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, கட்டளைகள் மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு, அவர்கள் சம்மந்தப்பட்ட நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் உள்ள கூட்டுறவுச் சங்கங்களை பொறுத்து, வாக்காளர் பட்டியல் தயாரித்தல், வெளியிடுதல் மற்றும் அச்சங்கங்களுக்கான நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் அலுவல் நிர்வாகிகளுக்கான (Members of the Board and Office Bearers) தேர்தல் நடத்த ஒத்துழைத்து மற்றும் மேற்பார்வை செய்தல் வேண்டும் என்பதுடன், ஆணையத்தால் அவ்வப்போது அவர்களுக்கு ஒப்படைக்கப்படும் செயல்பாடுகளை செயற்படுத்துதல் வேண்டும் என்றும் ஆணையம் அறிவிக்கிறது.

இவ்வகையில் இது தொடர்பாக ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள பார்வை 1-ல் காணும் ஆணையத்தின் செயல்முறை ஆணை ரத்து செய்யப்படுகிறது.

ஒம்/-
ஆணையர்

ஆணையருக்காக 4/1/23

இணைப்பு : மேற்க்கண்டவாறு.

பெறுநர்

மாவட்ட தேர்தல் அலுவலர்கள்
(சமூக நல இயக்குநர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை/மாநில தேர்தல் அலுவலர் மூலமாக).

நகல்

1. தலைமைச் செயலாளர், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-9
2. அரசு முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, சென்னை-9.
3. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, சென்னை-9.
4. அலுவலக இருப்புக் கோப்பு
5. கணினி ஆளுமையாளர்.

| இணைப்பு | | | |
|---|---|---|---|
| ந.க.எண் 875/2022/கூதே1(2) | | | |
| வ.எண் | துறை | சரகம் | பதவியின் பெயர் (Designation) |
| 1 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | அரியலூர் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 2 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | சென்னை | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 3 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | கோயம்புத்தூர் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 4 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | கடலூர் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 5 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | தருமபுரி | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 6 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | திண்டுக்கல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 7 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | ஈரோடு | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 8 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | கரூர் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 9 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | கன்னியாகுமரி | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 10 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | காஞ்சிபுரம் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 11 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | கிருஷ்ணகிரி | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 12 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | மதுரை | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 13 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | நீலகிரி | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 14 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | நாகப்பட்டினம் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 15 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | நாமக்கல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 16 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | பெரம்பலூர் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 17 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | புதுக்கோட்டை | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 18 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | சேலம் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 19 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | சிவகங்கை | மாவட்ட சமூகநல அலுவலர் |

| வ.எண் | துறை | சரகம் | பதவியின் பெயர் (Designation) |
|---|---|---|---|
| 20 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | இராமநாதபுரம் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 21 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | தேனி | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 22 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | திருவண்ணாமலை | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 23 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | தஞ்சாவூர் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 24 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | திருவாரூர் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 25 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | திருநெல்வேலி | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 26 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | திருவள்ளூர் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 27 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | திருப்பூர் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 28 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | திருச்சி | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 29 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | தூத்துக்குடி | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 30 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | வேலூர் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 31 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | விழுப்புரம் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 32 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | விருதுநகர் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 33 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | செங்கல்பட்டு | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 34 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | இராணிப்பேட்டை | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 35 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | திருப்பத்தூர் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 36 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | கள்ளக்குறிச்சி | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 37 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | தென்காசி | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 38 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | மயிலாடுதுறை | மாவட்ட சமூகநல அலுவலர் |

ஒம்/-

ஆணையர்

11/1/23

ஆணையருக்காக

11/1/23